IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.4

| | | |
|---|---|---|
| NAME | - | ஜான்சி ராணி |
| FATHER'S NAME | - | வேலு |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.03.2024.

<u>All Accsued Present.</u>

நான் வேலூர் தோட்டபாளையத்தில் குடியிருக்கிறேன்.நான் ராணிபேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். 04.01.2021 தேதியில் பிற்பகல் ஸ்கூட்டி பெப் வண்டியில் எங்கள் வீட்டில் இருந்து எங்கு போகிறேன் என்று சொல்லாமல் என் அப்பா சென்றார். மறுநாள் என்னுடைய அம்மா என்னிடம் நேற்று இரவில் இருந்து அப்பா வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னார். அதனால் நான் இரண்டு மூன்று நாட்கள் அக்கம் பக்கத்தில் தேடினேன். அவர் எங்கும் கிடைக்கததால் 10 ஆம் தேதி வேலூர் வடக்கு காவல்

நிலையத்தில் நானும் என் அம்மாவும் அண்ணா தம்பி மற்றும் உறவினர்களுடன் சென்று என் அப்பாவை காணவில்லை என்று புகார் கொடுத்தோம். மறுநாள் 11.01.2021 காலை வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள முத்து மண்டபம் பின்புறம் என்னுடைய அப்பா ஒட்டி சென்ற ஸ்கூட்டி பெப் வண்டி கிடைத்தது. அந்த பக்கத்தில் அவரை தேடி பார்த்தபோது அவர் கிடைக்கவில்லை. அதன் பிறகு காவல் நிலையத்தில் இருந்து வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள சுடுகாட்டில் கால் மட்டும் தெரியும் படி ஒரு சடலம் உள்ளதாக எங்களுக்கு தகவல் சொன்னார்கள். என்னையும், என் கணவர், அண்ணன், தம்பி, மற்றும் என் அம்மா மற்றும் உறவினகள் ஆகியோர்களை போலீசார் சுடுகாட்டிற்கு உள்ளே அழைத்து சென்றார்கள். அப்போது வி.ஏ.ஓ, தாசில்தார், ஆகியோர்கள் வந்திருந்தார்கள். ஒரு கால் மட்டும் தெரிந்திருந்தது. அதை மட்டும் வைத்து எங்களால் அடையாளம் காட்ட இயலவில்லை. அதன் பிறகு வி.ஏ.ஓ, தாசில்தார், சடலத்தை தோண்டி எடுக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த சடலத்தில் என் அப்பா காணாமல் அன்று உடுத்தி சென்ற சிகப்பு சட்டையும், கோடு போட்ட நில கலர் லுங்கியும் இருந்ததால் அது என்னுடைய தந்தை தான் என்று அடையாளம் காட்டினோம். தற்போது என்னிடம் சட்டை லுங்கி தான் சடலத்தை தோண்டி எடுத்த போது சடலத்தின் மீது இருந்த சட்டை லுங்கியாகும். சடலம் தோண்டி எடுத்தபோது மிகவும் அழுகிய நிலையில் புழுக்களுடன் இருந்தது. சடலத்தின் இடது மார்பில் ஒரு வெட்டு காயமும், வயிற்றின் இடது பகுதியில் மூன்று குத்து காயங்கள் இருந்தது. வலது பக்க கையில்

முழுங்கைக்கு கீழே எதுவும் இல்லாமல் இருந்தது. வலது கால் தொடையில் ஒரு வெட்டு காயமும் இ,ருந்தது. காயங்களை பார்த்த பிறகு எங்களுக்கு சந்தேகமாக இருந்தது. அதனால் அங்கிருந்த காவல் ஆய்வாளரிடம் ஒரு மாதத்திற்கு முன்னர் என்னுடைய வேலையை முடித்து விட்டு நான் வந்து கொண்டு இருந்த போது காரை கூட்டு ரோடு அருகில் எதிரி பரசுராமன் என்பவர் என்னை அழைத்து உன் அப்பாவிடம் சொல்லிவை அடிக்கடி என்னுடைய வழியில் கிராஸ் பண்ணறான் அதன்பிறகு வேறு ஆகிவிடும் என்று மிரட்டினார் என்றும் அவ்வாறு மிரட்டியதை நான் வீட்டிற்கு வந்து என்னுடைய அம்மா, தம்பி அண்ணா உறவினர்கள் ஆகியோர்களிடம் சொன்னேன் என்றும் கூறினேன். அதன்பிறகு என் அப்பாவின் இறப்பு குறித்து தாசில்தார் என்னிடம் விசாரணை செய்த போதும் மேற்சொன்னவாறு தான் சொன்னேன். அதன்பிறகு சடலம் மிகவும் அழுகிய நிலையில் அந்த இடத்திலேயே பிரேத பிரேத பரிசோதனை செய்தார்கள். அதன்பிறகு சடலத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். வழக்கு குறித்து போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இருசக்கர வாகனம் சம்பவ இடத்தில் இருப்பதாக எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 11.01.2021 தேதி காலை 6.30 மணியளயில் தெரியவந்தது. தகவல் கிடைத்தவுடன் போலீசார் தான் என்னையும் என் குடும்பதாரையும் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் ஆமாம். 10.01.2021 தேதி மாலை 7.30 மணிக்கு காவல் நிலையத்தில் என் அம்மா புகார் கொடுக்க சென்ற

போது நானும் உடன் சென்றேனா என்றால் ஆமாம். அன்று போலீசார் எங்களிடம் விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். 11.01.2021 தேதி காலை 7.30 மணிக்கு சுடுகாட்டிற்கு சென்ற போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் வி.ஏ.ஓ தாசில்தார், இன்ஸ்பெக்டர் ஆகியோர் இருந்தார்கள். போலீசார் என்னிடம் விசாரணை செய்தபோது போலீசார் தான் எங்களை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.11.01.2021 காலை 6 மணிக்கு போலீசார் எங்களிடம் சம்பவ இடத்தில் ஒரு மனிதனின் கால் மட்டும் தெரிகிறது என்ற தகவலை தெரிவித்தார்களா என்றால் ஆமாம். அதன்பிறகு என் அம்மா புகார் ஏதும் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்ற போது பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் போலீசார் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY